தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

ரூ. 15/– | மலர் 18 - இதழ் 08 – டிசம்பர் 2016 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

காலத்தால் அழிக்க முடியாத வரலாற்று தலைவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் சார்பிலும், அனைத்து சுய உதவிக் குழுக்களின் சார்பிலும், முற்றம் மாத இதழ் தனது அஞ்சலியை செலுத்துகிறது.

திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழுக்களின் மகளிரே,

பெண்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவரும், நம் அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானவரும், அனைவராலும் புரட்சித் தலைவி என்றும், அம்மா என்றும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயற்கை எய்தியது, நம் அனைவருக்கும் மறக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்?' என்ற வினாவிற்கு விடையாக நம் அனைவரின் உள்ளங்களிலும் நீங்காதவராக என்றும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றும் திகழ்கிறார்.

தொட்டில் குழந்தைத் திட்டம், மகளிர் கமாண்டோ படை, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகியவற்றில் பெண்களுக்கு முக்கியத்துவம் தந்தது, தாலிக்குத் தங்கம் என பெண்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திய பெருமைக்கு உரியவர், 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்பதை தனது தாரக மந்திரமாகக் கொண்டு மக்களுக்காகவே செயல்பட்டவர், தோல்விகளைக் கண்டு துவளாமல் வெற்றி ஒன்றே நோக்கமாகக் கொண்டு செயல்பட்ட இரும்பு பெண்மணியாக, தமிழகத்தின் முதல்வராக செயல்பட்டுள்ளார்.

சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காகவும், பெண்கள் அனைவரும் பொருளாதார சுயசார்பு பெற்று, தன்னம்பிக்கையுடன் செயல்படவும், தமிழகத்தை ஏழ்மையற்ற மாநிலமாக உருவாக்கவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்றால் அது மிகையாகாது.

நம் அனைவரின் மனதிலும் என்றும் வாழ்ந்து வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு சுய உதவிக் குழு மகளிர் அனைவரின் சார்பிலும் அஞ்சலி செலுத்துவதுடன்,பெண்கள் வாழ்வில் வளம் பெறவேண்டும் என்பதை தனது நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற, நாம் அனைவரும் உறுதி ஏற்றுக்கொள்ள வேண்டும். நம் மாநிலத்தில் ஏழ்மையை போக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நல்ல திட்டங்கள் பலவற்றைத் தீட்டி செயல்படுத்திய பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

சுய உதவிக்குழு மகளிர் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, கடந்த சென்ற 2016ஆம் ஆண்டு நமக்கு தந்த அனுபவங்களை பாடமாகக் கொண்டு எதிர் வரும் 2017ஆம் ஆண்டு மகிழ்ச்சியானதாக அமைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

வே. சாந்தா

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செய்திகள் 10

காலத்தால் அழிக்க முடியாத வரலாற்று தலைவி 06

குதிரைவாலி வெண் பொங்கல் 14

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார இயக்கம் 23

அரசியலமைப்பு சட்ட நாள் உறுதிமொழி 27

செம்மறி ஆடுகளில் நோய் தடுப்பு முறைகள் 34

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதை, குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் தங்கள் வாழ்வில் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சிறப்பாக முற்றம் இதழில் மாதந்தோறும் இடம் பெறுகின்றன. மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

திருமதி. சிவகாமி ராமகிருஷ்ணன்,
பஞ்சவர்ணக்கிளி மகளிர் சுய உதவிக் குழு,
திண்டல் மலை, ஈரோடு மாவட்டம்.

புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், மக்கள் கற்றல் மையங்கள், கூட்டமைப்புகள், ஒத்தத் தொழில் குழுக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சி குறித்த செய்திகள் முற்றம் இதழில் அதிகம் இடம் பெற்றுள்ளன.

திருமதி. செல்வி கிருஷ்ணமூர்த்தி,
உலக்குடி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்.

மகளிருக்கு பயனுள்ள பல்வேறு கட்டுரைகளும், சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் போன்றவற்றின் செயல்பாடுகளும், பிற துறைகளின் செய்திகளும் முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகின்றன. அனைவருக்கும் பயனுள்ள புத்தகமாக முற்றம் இருக்கிறது. முற்றத்திற்கு வாழ்த்துகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
தங்கமகள் மகளிர் சுய உதவிக் குழு,
கேத்தி, நீலகிரி மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக கடற்கரைப் பகுதிகளில் பாதிப்பிற்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த செய்திகள் அனைத்தும் படங்களுடன் சிறப்பாக உள்ளன.

திருமதி. தேன்மொழி சிவசுப்பிரமணியன்,
கடல் தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
பழவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்

மலர் 18 – இதழ் 08 – டிசம்பர் 2016
விலை ரூ. 15/-

கௌரவ ஆசிரியர்
திருமதி. **வே. சாந்தா,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

சி. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பா. செல்வராஜன்
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

பொறுப்பாசிரியர்
சு, மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

உயரத்தில் வலம் வர வேண்டும்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

நமது மறைந்த முன்னாள் முதல்வர், அம்மா என்று அன்போடு மக்கள் அனைவராலும் அழைக்கப்பட்ட மாண்புமிகு செல்வி. ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு முற்றம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றது.

மறைந்த முதல்வரின் திட்டங்களான தொட்டில் குழந்தைத் திட்டம், மாணவர்களுக்கு மடிக் கணினி மற்றும் மிதிவண்டி வழங்கும் திட்டம், பெண்களுக்கு தொழில் முனைவோர் திட்டம், பசுமை வீடு திட்டம், உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு, புதுவாழ்வு திட்டம் என பெண்ணினம் மேலோங்க வேண்டும் என்ற நோக்கில், பல இன்னல்களைத் தாண்டி சாதனை படைத்து, சரித்திரத்தில் இடம் பெற்ற இரும்புப் பெண்மணியினை தமிழக மக்கள் குறிப்பாக பெண்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றனர்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்ற கூற்றிற்கு இணங்க, அவருக்கு ஏற்பட்ட தடைக்கற்களை எல்லாம் படிக்கற்களாக மாற்றியது, பெண்கள் அனைவரும் மாதவம் செய்து பிறந்தவர்கள் என நிரூபித்தவர்.

பிறக்கவிருக்கும் புத்தாண்டு புது எழுச்சியுடன், தார்மீக சிந்தனையுடன், நேர்மையை பிரதிபலிக்கும் மக்களை உருவாக்கட்டும். சாதி, மத, இன வேறுபாடுகளின்றி, மானுடர்கள் யாவரும் மதிப்பு மிக்கவர்களே என்ற கோட்பாட்டினை வலியுறுத்தட்டும். தேசியவாத எண்ணங்கள் பல தோன்றட்டும். இயக்கமில்லா சொத்துக்கள் மற்றும் இயந்திரமயமான வாழ்க்கையை ஒதுக்கித் தள்ளட்டும். குடும்பத் திற்கான பங்களிப்பும், உறவுகளுக்கான மகத்துவமும் 2017ல் துளிர்விட்டு பிறப்பெடுக்கட்டும்.

எத்தனை இடர்பாடுகள் வந்தாலும், ஒவ்வொரு ஆண்டின் பிறப்பிலும் எதிர்பார்ப்பு என்பது அனைவரிடத்தும் மேலோங்கும் வண்ணமாகவே உள்ளது. கடக்கின்ற ஆண்டு என்பது இழக்கப்படுகின்றது. இந்த இழந்த ஆண்டில் மனிதர்களுக்கு கிடைத்த மாபெரும் வாய்ப்பினை, மனிதத்தை மதிக்கின்ற மகத்துவமான செயல்பாடுகளை எவ்வளவு இழந்து இருக்கின்றோம் என்பதனை பிறக்கின்ற ஆண்டிலாவது நாம் செயல்படுத்த முயற்சிப்போம்.

காலத்தின் வேகத்தினையும், நேரத்தின் தேவைகளையும் என்றைக்கு உணர ஆரம்பிக்கின்றோமோ, அன்றைக்கு ஒவ்வொருவரும் 'நாள் இந்தியன்' என்று மார்தட்டிக் கொள்வதில்தான் உண்மையான பெருமை உள்ளது. புதிய ஆண்டில் 'முடியாது' 'நடக்காது' என்ற வார்த்தைகளை தவிர்த்து விடுவோம். வாழ்க்கையின் பாதுகாப்பு கருதி ஒற்றை வட்டத்திலேயே சுழன்று கொண்டிருப்பதை விட்டு நகர்ந்து, உயர்ந்த, பரந்த அளவில் சுழல முயற்சிப்போம். இயற்கையோடு வாழ்ந்த வாழ்க்கையை மீட்டுருவாக்கினால், இயற்கையும் நம்மை அன்பு செய்யும் என்பதை உணர்ந்து கொள்வோம். பெறுவதை விட அதிகமாக மாற்றார்க்கு அளிப்பதே சுகம் என்பதை உணருவோம்.

எப்போதும் இளமை, எப்போதும் அமைதி, எப்போதும் உத்வேகம், எப்போதும் தெளிவான சிந்தனை, முடிவெடுக்கும் திறன் என ஒவ்வொருவரிடமும் பிறப்பெடுக்க வேண்டும். நேற்றைய கவலைகளையும், நாளைய பயத்தையும் நினைக்காமல், இக்கணத்தின் நேரத்திற்கு மதிப்புக் கொடுத்து, உண்மையுடனும், உழைப்புடனும் செயல்பட வேண்டும். 'புதுவாழ்வும், புதுவளமும் நம்மை சூழட்டும்' என முற்றம் தனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களின்

உடல் முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம்

தமிழக அரசியலில், இரும்புப் பெண்மணியாகத் திகழ்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி முதல் 75 நாட்களாக சென்னை அப்போலோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் 05.12.2016 அன்று இரவு 11.30 மணிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயற்கை எய்தினார்.

அதைத் தொடர்ந்து, மருத்துவமனையில் இருந்து புரட்சித் தலைவியின் உடல் போயஸ் கார்டன் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அவரது உடலுக்கு சம்பிரதாய முறைப்படி சில சடங்குகள் செய்யப்பட்டன. அதன் பின்னர் பொதுமக்கள் அஞ்சலிக்காக சென்னை ராஜாஜி அரங்கத்திற்கு உடல் கொண்டு செல்லப்பட்டது. தமிழகம் முழுவதும் இருந்து, திரண்டு வந்த அ.தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் அவருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

இந்திய ஜனாதிபதி திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், பிரதமர் திரு. மோடி அவர்கள், காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்கள், பிற மாநில முதல்வர்கள் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் (டில்லி), திரு. சந்திரபாபு நாயுடு (ஆந்திரா), திரு. சித்தராமையா (கர்நாடகம்), திரு. சிவராஜ் சிங் சவுகான் (மத்திய பிரதேசம்), திரு. நவீன் பட்நாயக் (ஒடிசா), திரு. தேவேந்திர பட்னவிஸ் (மகாராஷ்டிரா), திரு. பினராயி விஜயன் (கேரளா), திரு. அகிலேஷ் யாதவ் (உத்திரபிரதேசம்) மற்றும் திரு. நாராயணசாமி (புதுச்சேரி) உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

மேலும் மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள், திரு. வெங்கையா நாயுடு அவர்கள், திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள், தமிழக ஆளுநர் திரு. வித்யாசாகர் ராவ் அவர்கள், தமிழக அமைச்சர் பெருமக்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், திரையுலகப் பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மாலை 4.20 மணிக்கு, முப்படை வீரர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உடல் இருந்த பெட்டியை, அலங்கரிக்கப்பட்ட ராணுவ வாகனத்தில் ஏற்றினர். அதைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம் துவங்கியது. இந்த வாகனத்தின் முன் தமிழக அமைச்சர்கள் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் சென்றனர்.

வழிநெடுகிலும் கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் கண்ணீர் மல்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மக்கள் வெள்ளத்தில் நீந்தியபடி, இறுதி ஊர்வல வாகனம் மாலை 5.27 மணிக்கு அண்ணா சாலை, வாலாஜா சாலை வழியாக கடற்கரை சாலையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தை அடைந்தது. அங்கு முப்படை வீரர்கள், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை அடக்கம் செய்யும் இடத்திற்கு சுமந்து சென்றனர். கீழே இறக்கி வைத்து, முப்படை வீரர்கள் மரியாதை செலுத்தினர். அதைத் தொடர்ந்து, தமிழக ஆளுநர் திரு. வித்யாசாகர் ராவ் அவர்கள் மலர் வளையம் வைத்து, இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அவரைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்கள் திரு. வெங்கையா நாயுடு அவர்கள், திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள், தமிழக முதல்வர் திரு. ஓ. பி. பன்னீர் செல்வம், லோக்சபா துணை சபாநாயகர் திரு. தம்பித்துரை அவர்கள், தமிழக சபாநாயகர் திரு. தனபால் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு. ராமமோகனராவ் அவர்கள், முன்னாள் ஆளுநர் திரு. ரோசைய்யா அவர்கள், காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள், தமிழக காங்கிரஸ் தலைவர் திரு. திருநாவுக்கரசர் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மாலை 5.57 மணிக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உடல் மீது போர்த்தியிருந்த தேசியக் கொடியை முப்படை வீரர்கள் அகற்றினர். அதன் பின்னர் மத ரீதியிலான இறுதிச் சடங்குகள் துவங்கின. திருமதி. சசிகலா மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அண்ணன் மகன் திரு. தீபக் ஆகியோர் இறுதிச் சடங்குகளை செய்தனர்.

மாலை 6.06 மணிக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உடல், சந்தனப் பேழையில் வைக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்குகள் முடிந்தன. புரட்சித் தலைவி அம்மா என்ற சகாப்தம் நிறைவு பெற்றது.

காலத்தால் அழிக்க முடி

காலம் பிரித்தாலும், மக்கள் மனங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக தலைநிமிரச் செய்து, காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றுச் சிறப்புகளை தனதாக்கிக் கொண்டவர். அகிலமே வியந்து பாராட்டும் தங்கத் தாரகையின் சாதனைகள் பற்றிய ஒரு சிறப்புச் செய்தி தொகுப்பு.

கல்வியில் சிறந்த கலைக்கூடம்... கட்டுப்பாடுகள் காத்து நிற்கும் மணி மகுடம்... பெருமைமிகு பேராற்றலின் பெருந்தவம்... பெயர் தாங்கி நிற்பதிலோ எப்போதும் ஜெயம்... எதிரிகளை கடைசி வரை எதிர்க்கும் போர்க்குணம்... துரோகங்களை துணிவுடன் களையும் வேர்க்குணம்... இவையெல்லாம் இவரின் மாற்ற முடியாத முகவரி...

‘மக்களால் நான், மக்களுக்காகவே நான். உங்களால் நான், உங்களுக்காகவே நான்’ வாழ்வு தேடி வந்தவர்களுக்கெல்லாம் இந்த தாரக மந்திரம்தான் இந்த தாய் தந்த முகவரி...

திரு. ஜெயராம் – திருமதி. வேதவள்ளி தம்பதியருக்கு 1948ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 24ஆம் தேதி பிறந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இளம் வயதிலேயே தந்தையை இழந்த மகளாய் தாயின் பராமரிப்பில் வளர்ந்தார். இளம் பிராயத்திலேயே கவின்மிகு அழகுடனும், கருணை உள்ளத்தோடும் திகழ்ந்தார்.

பெங்களூருவில் பிரசித்திப் பெற்ற பிஷப் கார்டன் பெண்கள் பள்ளியில் பயின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பின்னர் சென்னை சர்ச் பார்க் கான்வென்டில் உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். படிப்பில் மிகச் சிறந்த மாணவியாக விளங்கியதுடன், விளையாட்டு, நடனம் என அனைத்துத் துறைகளிலும் சிறந்த விளங்கினார். குரல் வளத்திலும் சிறந்து விளங்கியதால், ஆசிரியர்கள் மாணவர்களிடையே செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

மெட்ரிக் தேறிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேல் படிப்பில் சேர அனுமதி கிடைத்த நிலையில், திரைப்படம் என்ற மாபெரும் மக்கள் சாதனம், அவரை இருகரம் கூப்பி வணங்கி வரவேற்று வாஞ்சையோடு அணைத்துக் கொண்டது.

சென்னை ராபின்சன் பூங்காவில், கொட்டும் மழையில் பேரறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை, எம்.ஜி.ஆர். என்ற தமிழ் மக்களின் வரம், உரமாக இருந்து, உயிரூட்டி, உணர்வூட்டி வளர்த்தது. இதனைத் தொடர்ந்து, மாபெரும் மக்கள் சக்தியான, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு மக்கள் தங்கள் ஆதரவைத் தந்தனர்.

பிறந்த குழந்தை, தவழத் தொடங்கும் முன், நடக்க வைக்கிற முயற்சியாக, கட்சித் தொடங்கிய ஆறே மாதங்களில், திண்டுக்கல் இடைத் தேர்தலை கழகம் சந்திக்க வேண்டியிருந்தது. முதல் தேர்தலிலேயே முழு வெற்றி, மக்கள் எப்போதும் கழகம் பக்கம்தான் என்பது முதல் முறையாக நிரூபணமானது.

தனக்குப் பிறகு தான் கட்டி வளர்த்த இயக்கத்தை கட்டிக் காப்பது யார்? அந்த ஆற்றலும், பெருமையும் யாருக்கு இருக்கிறது என்பதை உயர்வதில் பெரும்பாலானத் தலைவர்கள் தோற்றுத்தான் போயிருக்கிறார்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு தீர்க்கதரிசி. மக்களின் மனங்களைப் நாடிப்பிடித்து பார்த்த மகத்தான மனிதர். தனக்குப் பிறகு, கழகம் என்ற மக்கள் இயக்கத்தை கட்டுப்பாட்டோடு கொண்டு செல்ல இவர்தான் தகுதியானவர் என முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அடையாளம் காட்டினார்.

எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையை, குறிப்பாக மக்களின் நம்பிக்கையை காப்பாற்றினார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆளுமைத் திறனும், கழகத்தைக் கட்டிக்காக்கும் பேராற்றலும், கழகம் என்ற மாபெரும் மக்கள் இயக்கத்திற்கு அவசியம் என்பதை அறிந்திருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தனக்கு பக்கபலமாக, உறுதுணையாக, வலுசேர்க்கும் விதமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களை, கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்தார்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினராக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் நியமிக்கப்பட்டார். கிராமப்புற, நகர்ப்புற மாணவ, மாணவிகளுக்கும் சத்துணவு கிடைக்கும் வகையில் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து, சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்திய புரட்சித் தலைவியை எம்.ஜி.ஆர். அவர்கள் வெகுவாகப் பாராட்டினார். இதனையடுத்து 1984ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் தேதி, கழகம் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

யாத வரலாற்று தலைவி

1984ஆம் ஆண்டு தமிழகத்தின் 8வது சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், கழக கூட்டணி பிரம்மாண்ட வெற்றி பெறுவதற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரவு பகல் பாராத சூறாவளி சுற்றுப்பயணம் காரணமாக அமைந்தது.

1987ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்கை எய்திய செய்தி, மக்களின் நெஞ்சங்களில் பேரிடியாய் இறங்கியது. கழகம் அடியோடு அழிந்ததாக எதிர்க்கட்சிகள் எக்காளமிட்டன. எதையும் எதிர் கொள்ளும் துணிச்சலும், எதிர்போரும் வியக்கம் அறிவுடர்த்தியும், எண்ணற்ற மக்களின் ஆதரவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமைக்கு கிரீடம் சூட்டின.

1988ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிர்வாகிகளாலும், தொண்டர்களாலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருவேறாக பிளவுபட்டிருந்த கட்சியை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை முதல் கன்னியாகுமரி வரை தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விட்டுச் சென்ற கழகத்தின் வேரில் நீருற்றி, இரட்டை இலையைப் புத்துணர்ச்சி பெறச் செய்தார்.

தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவோடு, 1991ம் ஆண்டு முதன்முறையாக தமிழக முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றார்கள். உன்னதத் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டத்தை, முதன் முறையாக செயல்படுத்தியபோது உலகமே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தாயுள்ளத்தைப் பாராட்டியது.

2001ஆம் ஆண்டு மீண்டும் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களின் உன்னதத்தை உலகறியச் செய்யும் வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக 'பெண் கமாண்டோ படையை' உருவாக்கி, நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். பெண் சிசுக் கொலையை தடுக்கும் விதமாக 'தொட்டில் குழந்தைத் திட்டத்தை' துவக்கினார்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில், கழகம் 150 இடங்களில் வெற்றி பெற்று, மீண்டும் தமிழக முதலமைச்சரான புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்க்கட்சி யார் என்பதைத் தீர்மானிக்கும் மிகப் பெரிய சக்தியாக விளங்கினார். மக்களுக்கு நன்மை பயக்கும் நல்ல பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார்.

2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மக்கள் தங்கள் பேராதரவை வாரி வழங்கினர். பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பாரினில் பாங்குடன் உதித்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக முதலமைச்சராகி மக்களுக்குத் தந்த பலப்பலத் திட்டங்கள் சுவை தரும் பலாத் திட்டங்களாகி மக்களின் சுமையைக் குறைத்தன.

வெற்றி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வீட்டின் வேலைக்காரராய் மாறியது. தோல்விகளோ அவரின் போர்க்குணம் அறியாமல் அவரிடம் தோற்றுப் போயின. வீரத்தின் விளைநிலமான புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தாயின் கருணையைப் போல் ஈரமும் இருந்தது.

போராட்டங்கள் இவரிடம் போராடிப் போராடியே ஓய்ந்து போயின. அன்பு காட்டுபவர்களுக்கு அரவணைக்கும் தாய்... அழிக்க நினைப்பவர்களுக்கோ அக்கினிப் பிழம்பு... அதில் வெந்து தணிந்தது வீணர் கூட்டம்... எல்லாவற்றையும் ஒரு கை பார்த்தவர், இவர் கை தொட்ட நோயை மட்டும் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டதாலேயே என்னவோ காலன் அவரை அரவணைத்துக் கொண்டது.

பொதுமக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு, தன்னலம் பாராது உழைத்ததால் தான், தன்னலம் மட்டுமே பேணும் மரணம் அவரைத் தழுவிக் கொண்டதோ?

வரலாற்றை பலர் வாசிக்கிறார்கள்... ஆனால் ஒரு சிலர்தான் வாழும் போதே வரலாறாய் வசிக்கிறார்கள்... புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ற வரலாற்றை வரும் காலமும் வாசிக்கும்... நேசிக்கும்... காலம் உள்ளவரை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் சொல்லும்.

காரணம்... காலம் சந்தர்ப்பவாதிகளை மறந்துவிடும்... சகாப்தத்தை மறக்குமா? முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு சகாப்தம்... தமிழர்களின் சகாத வரம்... அவர் நம்மை விட்டு நீங்கி விட்டாலும், அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

நன்றி – நமது எம்.ஜி.ஆர். நாளிதழ்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேச்சில் விளைந்த அமுதமொழிகள்

மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழுத்தில், பேச்சில் மலர்ந்த அமுத மொழிகளைக் கீழே காணலாம்.

என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை – எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒருபோதும் தவறியதில்லை.

நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்.

மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதைவிட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் சதாசர்வகாலமும் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். அதனால் தான் என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எப்போதும் என் பக்கம் இருக்கிறீர்கள்.

பெண்ணை ‘சக்தி’ என்று அழைக்கிறோம். அவள் சக்தியின் பிறப்பிடம். சக்தியின் இருப்பிடம், சக்தியின் சிறப்பிடம்.

என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன.

பெண்கள் நினைத்தால், தங்கள் தலை எழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலை எழுத்தையும் மாற்ற முடியும். அவர்களுக்குத் தேவை, வாய்ப்புகள். அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே, எனது இலட்சியம்.

மாபெரும் வெற்றி என்பது, ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல. அது, சிறு சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை.

மாற்றத்தை தந்திட்ட தமிழக மக்களுக்கு ஏற்றத்தை தரும் வகையில், சீரிய முறையில் திட்டங்களைத் தீட்டி, சிறப்பான முறையில் செயல்படுத்துவதுதான், உண்மையான, மக்கள் நலன் நாடும் அரசின் கடமை ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதே எனது கனவாகும்.

யார் போற்றினாலும், தூற்றினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி தான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்.

எந்த நிலைமையையும் சந்திப்பதற்கு, சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

தமிழக மக்களால் நான், தமிழக மக்களுக்காகவே நான்.

எனக்கு சுயநலம் என்பது அறவே கிடையாது. எனக்கென்று எதுவும் தேவையில்லை. எனக்கென்று யாருமே கிடையாது. எனக்கு எல்லாமே தமிழக மக்கள் தான்.

தமிழகமே எனது குடும்பம். தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன்.

காலத்தால் அழிக்க முடியாத வரலாற்று தலைவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித் தலைவி **அம்மா** அவர்களுக்கு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,

புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் சார்பிலும்,

அனைத்து சுய உதவிக் குழுக்களின் சார்பிலும்,

முற்றம் மாத இதழ் தனது அஞ்சலியை செலுத்துகிறது.

வேலைவாய்ப்பு முகாம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. 17.12.2016 அன்று தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசினர் கலைக்கல்லூரியில் தஞ்சை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமில் தஞ்சாவூர் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் மாவட்ட கூடுதல் காவல்துறை ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், சென்னை, அரியலூர், கோயம்புத்தூர், பெரம்பலூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் ஆகிய மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் செயல்படும் பல்வேறு தனியார் நிறுவனங்களின் பிரநிதிதிகள் தங்களின் நிறு வனங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்ய வந்திருந்தனர்.

18 வயது முதல் 35 வயது வரை உள்ள, 10ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை, தொழிற்கல்வி, பட்டயப்படிப்பு மற்றும் பட்டப் படிப்பு படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம் 3,234 நபர்கள் இம்முகாமில் கலந்து கொண்டனர். இவர்களில் பல்வேறு நிறுவனங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 455 நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம்

செவிலியர் உதவியாளர்களுக்கான பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்குதல்

தேனி மாவட்டத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 2014–2015ம் நிதியாண்டில் 100 நாட்கள் முழுமையாக பணிபுரிந்த பயனாளிகளின் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்குத் திறன் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி, சுய தொழில் வேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தில் 17 பயனாளிகளுக்கு Network for Empowering Oppressed Society (NEO) என்ற நிறுவனத்தின் கீழ் தேனி கிருஷ்ணம்மாள் நினைவு மருத்துவமனை பாராமெடிக்கல் கல்லூரியில் மூன்று மாத கால செவிலியர் உதவியாளர் (Nursing Aides) பயிற்சி நடத்தி முடிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான சான்றிதழ் மற்றும் பயிற்சி உதவித் தொகைக்கான வரைவு காசோலை ஆகியவற்றை 19.12.2016 அன்று தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் (பொ) திரு. சு. பால்ராஜ் அவர்கள் முன்னிலையில், தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. இரா. தங்கபாண்டியன்,திரு. என். செல்வராஜ், திரு. பெ. முருகேசன் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

தேனி மாவட்டம்

திருவாரூர் மாவட்டம்

வேலைவாய்ப்பு முகாம்

திருவாரூர் மாவட்டத்தில் 2016–17ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு முகாம் திருவாரூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகிய வற்றின் சார்பில் 29.11.2016 மற்றும் 30.11.2016 ஆகிய இரண்டு தேதிகளில் முறையே மன்னார்குடி மற்றும் முத்துப்பேட்டை ஆகிய வட்டாரங்களில் நடைபெற்றது.

இம்முகாம்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 26 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்களை தேர்வு செய்தனர். மேற்படி வேலைவாய்ப்பு முகாமில் 578 இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் தகுதி வாய்ந்த 169 இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

இம்முகாம்களை திருவாரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் உதவித் திட்ட அலுவலர்கள், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், களப்பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், 26.11.2016 அன்று வேலூர், தொன்போஸ்கோ உயர்நிலைப் பள்ளியில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு வழங்கிட இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. ச. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். திட்ட இயக்குநர் (பொ) திரு. பெ. பெரியசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்களும் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருமதி. நிலோபர் கபில் அவர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு, வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இளைஞர்களுக்கான இந்த வேலைவாய்ப்பு முகாமில் போன்ற 42 முன்னணி நிறுவனங்களில் இருந்து, தங்கள் நிறுவனங்களில் பணிபுரிய தேவையான இளைஞர்களை தேர்வு செய்தனர். இம்முகாமில் அணைக்கட்டு, காணியம்பாடி, காட்பாடி, வேலூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் வேலூர் மாநகராட்சி பகுதிகளைச் சார்ந்த 3935 இளைஞர்கள் கலந்து கொண்டதில், 785 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, 525 இளைஞர்கள் பணி நியமன ஆணைகளைப் பெற்றனர்.

வேலைவாய்ப்பு முகாமிற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், தமிழ்நாடு அரசிற்கும் தங்களின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

வேலூர் மாவட்டம்

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடன்

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 29.11.2016 அன்று நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் தின் கீழ் வங்கி நேடிரக் கடனாக தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 3 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 11.50 இலட்சமும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 3 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 11.25 இலட்சம், நாகர்கோவில் நகராட்சி பகுதியைச் சார்ந்த 1 சுய உதவிக் குழுவிற்கு ரூ. 7 இலட்சம், நகர்ப்புற பகுதியைச் சார்ந்த 3 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூ. 6 இலட்சம், ஊரகப் பகுதியைச் சார்ந்த 22 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனி நபர் கடனாக ரூ. 2.37 இலட்சம் என மொத்தம் 49,12,500/- ரூபாய்க்கான காசோலையை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்சி லீமா அமலினி, உதவித் திட்ட அலுவலர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. ப. அந்தோணிசிலுவை, திருமதி. எம். கலைச்செல்வி, திரு. எம். கே. பிச்சையப்பா மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் தொகுதி வழிநடத்துநர்கள் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு முகாம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவை இணைந்து நடத்திய வேலைவாய்ப்பு முகாம் 26.11.2016 அன்று, கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமினை கோட்டாட்சியர் திரு. முகமது அஸ்லாம் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. இரா. இராஜசேகர், உதவித் திட்ட அலுவலர்கள், கிருஷ்ணகிரி வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், கிருஷ்ணகிரி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் களப்பகுதி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் 1752 இளைஞர்களும், 35 தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டனர். இதில் 871 இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

வேலைவாய்ப்பு முகாமில் 590 பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தீன தயாள் உபாத்யாயா கிராம் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, புதுவாழ்வு திட்டம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியன இணைந்து, கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் 17.12.2016 அன்று மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தின. இதில் 7729 இளைஞர்கள் பணி வாய்ப்பு வேண்டி கலந்து கொண்டனர். 103 தனியார் நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்களின் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்தனர். இதில் 590 இளைஞர்கள் உடனடியாக வேலைவாய்ப்பு பெற்றனர்.

இம்முகாமில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. எம். ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பணி வாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு. பிச்சை, மகளிர் திட்ட இயக்குனர் திருமதி. கு. இந்துபாலா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. நாகேந்திரன், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. கர்ணன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆதார் எண்ணை வங்கிக் கணக்கில் இணைத்தல் மற்றும் RuPay Debit Card வழங்குதல் சிறப்பு முகாம்

ஈரோடு மாவட்டத்தில் வங்கி ஒருங்கிணைப்பாளர்களை ஒருங்கிணைத்து வங்கிக் கணக்கில் ஆதார் எண்ணினை இணைத்திடவும் மற்றும் RuPay Debit Card-ஐ அனைத்து வங்கிக் கணக்குகளுக்கும் வழங்குதல் போன்ற பணிகளும் சிறப்பு முகாம்கள் மூலமாக 28.11.2016 முதல் 03.12.2016ம் தேதி வரை நடத்தப்பட்டது.

இந்த முகாமினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் 28.11.2016 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர், கனரா வங்கியின் முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் ஈரோடு வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, IDBI வங்கி மற்றும் கரூர் வைஸ்யா வங்கி ஆகியவை கலந்து கொண்டு, புதிய வங்கிக் கணக்கு துவங்குதல், அனைத்து வங்கி கணக்குகளிலும் ஆதார் எண்ணை இணைத்தல் மற்றும் RuPay Debit Card வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டன.

இம்முகாமில் 7149 புதிய வங்கிக் கணக்குகள் துவங்கப்பட்டன. 13,844 நபர் களின் வங்கிக் கணக்குகளில் ஆதார் எண் இணைக்கப்பட்டதுடன், 2623 பேருக்கு RuPay Debit Card வழங்கப்பட்டன.

மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் சூலக்கரையில் செயல்பட்டு வரும் மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர் சுழல் நிதி மற்றும் வங்கிக் நேரடிக் கடன் பெற்று, மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தின்பண்டங்கள் விற்பனை செய்யும் கடையினைத் துவக்கி உள்ளனர். இந்தக் கடையில் அதிரசம், முறுக்கு, பணியாரம் மற்றும் கேப்பை ரொட்டி போன்ற தின் பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 2000/- வரை வரு வாய் பெறுகின்றனர். நான்கு உறுப்பினர்கள் இந்தக் கடையில் விற்பனையினை மேற்கொண்டு வருகின்றனர். அனைத்து செலவினங்களும் போக மாதம் ஒன்றுக்கு ரூ. 10,500/- வரை இலாபம் கிடைக்கிறது.

தங்களின் குழுவிற்கு வாடகையின்றி கடை ஒதுக்கீடு செய்து கொடுத்து, வங்கிக் கடன் பெறுவதற்கு உதவி செய்து, தங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடன்

திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டாரத்தில் 03.12.2016 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது

இவ்விழாவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர், தாராபுரம் சார் ஆட்சியர், காங்கேயம் சட்ட மன்ற உறுப்பினர், ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர், மாவட்ட அளவிலான அரசுத் துறை அதிகாரிகள், உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் , மற்றும் மக்கள் நலப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்டம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 36.20 இலட்சம் நேரடிக் கடன் தொகையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

புதிதாக வங்கிக் கணக்கு துவக்குதல், ஆதார் எண்ணை இணைத்தல் மற்றும் ரூபே கார்டு வழங்குதல் சிறப்பு முகாம்

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு வங்கிக் கணக்கு துவங்குதல், ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்தல், ஜன்தன் திட்ட கணக்குதாரர்களுக்கு ரூபே கார்டு வழங்குதல் ஆகிய பணிகளை 100% முடிக்கும் நோக்கில் 28.11.2016 முதல் 05.12.2016 வரை சிறப்பு முகாம் நடைபெற்றது.

சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வங்கிப் புத்தகம் மற்றும் ரூபே கார்டு வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், முன்னோடி வங்கி மேலாளர் இந்தியன் வங்கி, ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர், பல்வேறு வங்கிகளின் மேலாளர்கள், புதுவாழ்வு திட்டத்தின் உதவித் திட்ட மேலாளர்கள் திரு. ராஜ[6], திரு. தாமோதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வங்கி ஆதார் கார்டு இணைப்பு தொடர்பான கலந்தாய்வு கூட்டம்

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் மாவட்ட அளவிலான துறை சார்ந்த அதிகாரிகளுக்கான வங்கியில் ஆதார் இணைப்பு தொடர்பான ஆலோசனை மற்றும் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. எல். சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊராட்சி வாரியாக மகளிர் குழுக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் வங்கியில் ஆதார் இணைப்பு மற்றும் புதிய வங்கி கணக்கு துவங்குதல், புதிய ஆதார் கார்டு எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்தல் போன்ற கருத்துக்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. ஆனந்தராஜ், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். நித்தியானந்தம், முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஆர். சேதுராமன் மற்றும் வங்கி அலுவலர்கள், ஒன்றிய அளவிலான அதிகாரிகள், உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

(வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள் – நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிக்கல்வி குறித்த கட்டுரை அடுத்த மாதம் இடம் பெறும்)

குதிரைவாலி வெண்பொங்கல்

தேவையானப் பொருட்கள்

குதிரைவாலி அரிசி – ஒரு கோப்பை, பாசிப்பருப்பு – கால் கோப்பை, மிளகு – ஒரு தேக்கரண்டி, மஞ்சத்தூள் – 2 சிட்டிகை, நெய் – ஒரு மேசைக்கரண்டி, வறுத்த முந்திரிப் பருப்பு – ஒரு மேசைக் கரண்டி, கறிவேப்பிலை – சிறிதளவு, உப்பு – தேவையான அளவு

செய்முறை

குதிரைவாலி அரிசி, பாசிப்பருப்பு, மிளகு, மஞ்சள் தூள், உப்பு ஆகியவற்றை சேர்த்து, வழக்க மான பொங்கல் தயாரித்துக் கொள்ளுங்கள். நெய்யில் மிளகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டி பொங்கலில் சேர்க்கவும். மேலே கொஞ்சம் வறுத்த முந்திரிப் பருப்பை தூவி பறிமாறவும்.

பலன்கள்

குதிரைவாலிப் பொங்கல் சுவையிலும், மருத்துவத் தன்மையிலும் ஈடு இணையற்றது. புரதம், இரும்புச் சத்து, உயிர்ச் சத்துக்கள் இதில் அதிகம். சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு, புற்றுநோய் மற்றும் இதய நோய்களை தவிர்க்கும் நார்ச்சத்து குதிரைவாலி மிக அதிகம் உள்ளது. கரையும் நார்ச்சத்து, இதய நாளங்களில் படியும் கொழுப்பைக் கரைக்கவும், இரத்தத்தில் திடீரென சர்க்கரை உயராமல் தடுக்கவும் கூடிய தன்மை குதிரைவாலியில் உள்ளது.

எளிய இயற்கை வைத்தியம்

சிறிது தண்ணீரில் ஒரு கரண்டி ஓமம் போட்டு கொதிக்க வைத்து, அதில் 100 மில்லி தேங்காய் எண்ணெயை விட்டு மீண்டும் கொதிக்க விட்டு, வடிகட்டிக் கொள்ளுங்கள். வடிகட்டியதோடு கற்பூரப் பொடியைக் கலந்து இளஞ்சூட்டுடன் இடுப்பில் தேய்த்து வர இடுப்பு வலி நீங்கும்.

வெண்டைக்காய் விதையைக் கொஞ்சம் பார்லி கஞ்சியில் போட்டு காய்ச்சி மூன்று நாள் வரை சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகும்.

உணவை சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரை டீஸ்பூன் ஆலிவ் எண்ணையை சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாயில் கொழுப்பு படியாமல் தடுக்கலாம்.

வாய்ப்புண் உள்ளவர்களுக்கு காரம் என்றால் ஆகாது. அதனால் முடிந்த வரை காரத்தைக் குறைத்துச் சாப்பிடுங்கள். தேங்காய்த் துண்டுகளை சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் எளிதில் ஆறும்.

ஜாதிக்காயை சிறு சிறு துண்டுகளாகச் சீவி, அதை நெய்விட்டு வறுத்து சாப்பிட்டு வந்தால் சீதளபேதி குணமாகும். இந்த பாதிப்பு உள்ளவர்கள் தயிர், மோர், இளநீர் ஆகியவற்றை அதிகம் உட்கொள்வது நல்லது.

உடல் குளிர்ச்சிக்கு வெந்தயம்

வெந்தயத்தில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. நாம் அன்றாட உணவில் பயன்படுத்தும் பொருட்களில் வெந்தயம் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உடலில் உள்ள இரத்த ஓட்டத்தை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது. நம் உடலுக்குத் தேவையான அனைத்துவித பயன்களும் வெந்தயத்தில் உள்ளன. வெந்தய விதைகளில் புரதம், சர்க்கரை, வைட்டமின், உலோகச் சத்து, அமினோ அமிலம் போன்றவை அடங்கியுள்ளன. வெந்தய இலைகளிலும், தண்டுகளிலும் கால்சியம் மற்றும் இரும்புச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

உடலுக்கு குளிர்ச்சி அளிப்பதுடன், உடலை சமநிலையில் வைக்கவும் வெந்தயம் பயன்படுகிறது. இரவில் வெந்தயத்தை ஊற வைத்து, காலையில் எழுந்து அந்தத் தண்ணீரை பருகி வந்தால் உடல் குளிர்ச்சியாக இருக்கும். மேலும் மலச்சிக்கல், நீரிழிவு, வயிற்றுப் புண், வாய் துர்நாற்றம் போன்ற பல நோய்கள் குணமாகும். வெந்தயத்தை அரைத்து தீப்பட்ட காயங்களில் தடவினால் எரிச்சல் குறைவதுடன், விரைவில் காயங்கள் குணமாகும்.

முழு சுகாதார தமிழகம்
முன்னோடி தமிழகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அலுவலக சிறப்பு பணி அலுவலர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களின் தலைமையில், 23/11/2016 அன்று சுகாதாரம் மேம்படுத்துதல் குறித்து தொடர்புடைய துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைந்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், பள்ளிக் கல்வித் துறை மற்றும் சமூக நலத்துறை சார்ந்த அரசுத் துறை முதன்மைச் செயலர்கள், இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அவர்கள் தலைமையில் 30.11.2016 அன்று சுகாதாரம் மேம்பாடு குறித்து தொடர்புடைய அரசுத் துறைகள் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக அலுவலகத்தில் நடைபெற்றது.

பூவிருந்தவல்லியில் உள்ள பொது சுகாதார பயிற்சி நிறுவனத்தில், 07.12.2016 அன்று சுகாதாரம் குறித்த கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் டாக்டர். கே. குழந்தைசாமி, இயக்குநர், தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை, திரு. கோ. இலட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் முதுநிலை ஆலோசகர்/கூடுதல் இயக்குநர் (ஓய்வு) திரு. கோ. இராதா ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

பூவிருந்தவல்லியில் உள்ள பொது சுகாதார பயிற்சி நிறுவன வளாகத்தில் உள்ள சுகாதார பூங்காவை பார்வையிடுதல்

சுகாதாரம் குறித்த கட்டுரைப் போட்டி

சுகாதாரம் குறித்த சிறப்பு கட்டுரைகள் முற்றம் மாத இதழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

கட்டுரையின் தலைப்பு :

அடுத்து வரும் டிசம்பர் மாதம் முற்றம் இதழில்

“ஏன் கழிப்பறை அவசியம் ?” என்ற தலைப்பில்

சிறப்பு கட்டுரை 250 வார்த்தைகளுக்கு மிகாமல் வரவேற்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரை அடுத்த முற்றம் இதழில் கட்டுரையாளரின் பெயர் மற்றும் புகைப்படத்துடன் வெளியிடப்பட்டு

ரூ. 1000/– ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

யார் பங்கேற்கலாம் :

இதில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மாணவர்கள், சுகாதார ஊக்குநர்கள் பங்கு பெறலாம்.

அனுப்ப வேண்டிய கடைசி நாள் :
10.01.2017

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் குழு – முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், மூன்றாம் தளம், வள்ளுவர் கோட்டம் பிரதான சாலை,
நுங்கப்பாக்கம், சென்னை – 600 034.
மின் அஞ்சல்: tnsanitationstories@gmail.com / wdcmutram@gmail.com

களப்பணியின் குரல்கள்

திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகளுக்கான தயார் நிலை குறித்து ஊக்குநர்களுக்கு பயிற்சி. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.
இடம்: விருதுநகர் மாவட்டம் – நாள்: 01/11/16

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக குறியீடு செய்தல்.
இடம்: கடல்பூண்டி கிராமம், ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். நாள்: 02/11/16

திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகளின் சுகாதார நிலை குறித்த ஆய்வு. வட்டார அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், வட்டார மேற்பார்வையாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கிராம அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்பு.
இடம்: திருவண்ணாமலை மாவட்டம் – நாள் : 02/11/16

சுகாதாரம் மற்றும் கழிப்பறை பயன்பாடு குறித்து பள்ளி மாணவர்களுடன் உரையாடல்.
நாள்: 02/11/16

முதுநிலை ஆலோசகர் / கூடுதல் இயக்குநர் (ஓய்வு) திரு. கோ. இராதா அவர்கள் மண்புழு உரம் தயாரித்தல் பற்றி ஆய்வு செய்தல்.
இடம் : முடிவைத்தனையந்தல் ஊராட்சி, தூத்துக்குடி மாவட்டம் – நாள்: 02/11/16

பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு.
இடம்: புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் – நாள்: 03/11/16

களப்பணியின் குரல்கள்

கழிவறையை இரவில் மட்டும்தான் உபயோகிப்போம் என்று கூறிய பள்ளி மாணவி அக்சயாவிடம், எப்போதும் கழிவறையில் மட்டும்தான் மலம் கழிக்க வேண்டும் என்றும், கழிப்பறை உபயோகம் உள்ளிட்ட சுகாதார செய்திகளை களப்பணியின் போது, கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பகிர்ந்து கொள்கிறார்.
இடம்: கரூர் மாவட்டம் – நாள்: 04/11/16

வீடு வீடாக சென்று கழிவறை பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
இடம்: பெரம்பலூர் மாவட்டம்
நாள்: 05/11/16

ஜனவரி 2017 திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சி குறித்த ஆயத்த பயிற்சி. மண்டல வட்டார அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் பயிற்றுநர்கள் பங்கேற்றனர்.
இடம்: சேலம் – நாள்: 07/12/16

சுகாதாரம் குறித்த மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம்.
இடம்: கடலூர் மாவட்டம்
நாள்: 07/11/16

உறிஞ்சுகுழி தனிநபர் இல்லக் கழிப்பறை முறையை வரைபடம் மூலம் கிராம மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தல்.
இடம்: கரூர் மாவட்டம் – நாள்: 08/11/16

திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி – தூண்டுதல் முறையில் விளக்கி எடுத்துரைத்தல்.
இடம்: அரியலூர் மாவட்டம் – நாள்: 08/11/16

களப்பணியின் குரல்கள்

பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரம் மற்றும் கழிப்பறை பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் பள்ளி மாணவர்களுடன் உரையாடுதல்.

இடம்: சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்

நாள்: 29/11/16

அங்கன்வாடி உதவி பணியாளர்களுக்கு ஒருநாள் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சியை உருவாக்குதல் குறித்த பயிற்சி

இடம்: நத்தம் ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்

நாள்: 30/11/16

திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற கிராம ஊராட்சியாக அறிவித்தல்.

இடம்: கோத்தாங்குளம் ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்

நாள்: 30/11/16

மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.

இடம்: வாங்கல் குப்புச்சிப்பாளையம் ஊராட்சி, கரூர் மாவட்டம் – நாள்: 21/12/16



திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகள் சுகாதார நிலை குறித்த கலந்தாய்வுக் கூட்டம் திட்ட இயக்குநர் தலைமையில் நடைபெற்றது.

இடம்: தருமபுரி மாவட்டம் – நாள்: 08/11/16

பள்ளி மாணவர்களுக்குதிறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

இடம்: திருவண்ணாமலை மாவட்டம்

நாள்: 28/11/16.

களப்பணியின் குரல்கள்

மலம் கழிப்பதற்கு Pottyயை உபயோகப்படுத்த குழந்தைகளை பழக்குதல்.
இடம்: குன்னுபட்டி ஊராட்சி, திருச்சி மாவட்டம்
நாள்: 28/11/16

கழிப்பறையை பாதுகாப்பான முறையில் குழந்தைகள் பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் உயரமாகவும், புத்திசாலியாகவும் விளங்குகின்றனர்.

தூண்டுதல் செயல்முறை விளக்கம் நிகழ்ச்சி மருதண்டபள்ளி கிராம ஊராட்சி, ஆலகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 25.11.2016 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திட்டஇயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஜாப் சக்காரியா, முதன்மை அலுவலர் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்பு கிராம சபையில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக மாற்றப்பட்டிருந்ததாக அறிவிப்பு.
இடம்: தூத்துக்குடி மாவட்டம் – நாள்: 24/11/16.

பயிற்றுநர்கள் தூண்டுதல் விளக்க செய்முறையில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

இடம்: நாகப்பட்டினம் மாவட்டம் – நாள்: 24/11/16.

பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்பான முறையில் கழிப்பறை உபயோகம் பற்றியும், தன் சுத்தம் பேணுதல் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாளையம்கோட்டை ஊராட்சி, தேனி மாவட்டம்
நாள்: 24/11/16.

களப்பணியின் குரல்கள்

கூடுதல் இயக்குநர் (NREGS), தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இடம்: தூத்துக்குடி மாவட்டம் – நாள்: 24/11/16.



மாணவர் ODF வருகைப் பதிவேட்டில் பதிவு செய்தல்.

இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மதுரை மாவட்டம்.

நாள்: 24/11/16.

சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சி என்று அறிவித்தல்.

இடம்: காராண்குறிச்சி ஊராட்சி, அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம் – நாள்: 23/11/16.

கழிப்பறை பயன்பாட்டினை குறித்த விழிப்புணர்வு பேரணி.

இடம்: திருச்சி மாவட்டம்

நாள்: 23/11/16.

மாவட்ட ஆட்சியர், மக்கள் குறைதீர்ப்பு நாளன்று திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இடம் : அரியலூர் ஊராட்சி, தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம் – நாள் : 23/11/16.


அருண் இப்ப வேற மாதிரி
ஆசையா பெத்து வளர்த்த குழந்தை, அது வயசுப் பிள்ளைகளைப் போல இல்லாம சுணங்கிச் சுணங்கி நின்னா யாருக்குத்தான் கவலையிருக்காது.
டாக்டரிடம்...
என்னதான் சாப்பிட்டாலும் இப்படிதான் இருக்கான். வயசு பதினொண்ணு ஆகுது... எட்டு வயசுப் பையன் மாதிரி இருக்கான் பாருங்க. படிப்பும் சரியா வரமாட்டேங்குது.
வீட்ல கழிப்பறை இருக்காமா?
அதெல்லாம் பிரச்சினை இல்லீங்க... வீட்டுக்குப் பின்னாடியே கம்மாக்கரைதான்
அதுதாம்மா பிரச்சினையே. திறந்தவெளியில மலம் கழிக்கிறதனால சுகாதாரச் சீர்கேடு மட்டுமில்லாம பல வியாதிகளும் பரவுது.
கழிப்பறை பயன்படுத்தற குழந்தைங்க ஆரோக்யமாக மட்டுமில்லாம வலிமையாகவும் புத்திசாலிகளாகவும் வளர்றதா ஆய்வுகள் சொல்லுது.
புரிஞ்சிடுச்சிங்க டாக்டர்... கழிப்பறை பயன்படுத்தறதால வயசுக்கேத்த வளர்ச்சியும் வலிமையும் கிடைச்சா அதைவிட வேற என்னங்க முக்கியம்!
நாங்க கழிப்பறை கட்டிட்டோம். இப்ப அருணோட பள்ளியில அவன்தான் சாம்பியன் தெரியுமா!

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

புதிய மாவட்டங்களில் திட்டம் செயல்படுத்துவதற்கான சிறப்பு கருத்தாய்வுக் கூட்டம் – ஒரு பார்வை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் புதிதாக மேலும் ஆறு மாவட்டங்களில் நீடிக்கப்பட உள்ளது. செயல்படுத்தப்படும் திட்டங்கள் மக்களின் தேவைகளை அறிந்து கொள்வதுடன், நடைமுறையில் உள்ள இதரத் திட்டங்களையும் சீராய்வு செய்து, விடுபட்ட தேவைகளை நிறைவேற்றிட நீடித்த வாழ்வாதாரத் திட்டம் உருவாக்கிட வேண்டும் என்ற உத்வேகத்தின் அடிப்படையில், தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், 17.11.2016 அன்று சிறப்புக் கருத்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கருத்தாய்வுக் கூட்டத்தில். வருவாய் நிர்வாக ஆணையர், மீன்வளத்துறை உயர் அலுவலர்கள், நாகை மீன்வளக் கல்லூரி, வங்களா விரிகுடா கடல் மேம்பாட்டுத் திட்ட இயக்குநர், மன்னார் வளைகுடா மேம்பாட்டுத் திட்ட இயக்குநர், காந்தி கிராமம் பல்கலைக் கழகப் பேராசிரியர், மத்திய கடல்சார் ஆய்வுக் கழக அறிஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஆசிய நாடுகளின் வாழ்வாதார நிலை குறித்த கருத்தரங்கம், புதுடில்லி

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து, ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட வாழ்வாதாரம் குறித்த கருத்தரங்கு 08.12.2016 அன்று புதுடெல்லியில் நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு.எல். ராஜா அவர்கள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர் திரு. சி. எல். செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் கிராம மற்றும் நகர அளவில் வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய முயற்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் பல்வேறு நாடுகளில் இருந்து துறை அலுவலர்கள், வங்கியாளர்கள் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு வல்லுநர்கள் கலந்து கொண்டனர். ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி சார்பாக திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம், புதுடெல்லி

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், 09.12.2016 அன்று புதுடில்லியில் உள்ள பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் இந்திய அலுவலகத்தில் திருமதி. ஓமர் ராஷா மற்றும் திரு. வின்சென்ட் டார்லாங்க் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உத்தரகண்ட், மகாராஷ்ட்ரா, ஒடிசா, மத்திய பிரதேசம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. நடப்பு ஆண்டின் செயல்பாடுகளும், 2017-18ஆம் ஆண்டின் வரைவுத் திட்டமும் விவாதிக்கப்பட்டன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பாக கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், நிதி மற்றும் நிர்வாக மேலாளர் திரு. என். சுந்தரராஜன், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர் திரு.சி. எல். செந்தில்குமார், தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர் திரு ஆர். இரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

திறந்தவெளி கழிப்பிடமில்லா கிராமங்களை உருவாக்குதல் – ஓர் சிறப்பு முயற்சி

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களை திறந்தவெளி கழிப்பிடமில்லா கிராமங்களாக உருவாக்குவதற்காக, இத்திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் தலைமையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நெம்மேலி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பனிச்சமேடு மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள சிங்கிரிக்குடி ஆகிய கிராமங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பொறுப்பாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் 25.11.2106 மற்றும் 26.11.2016 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

இதன்படி அனைத்து சுய உதவிக் குழுக்களின் வீடுகளிலும் தனிநபர் கழிப்பறை, தூய்மை இந்தியா / தூய்மை தமிழகம் திட்டத்தின் கீழ் கட்ட நடவடிக்கை எடுத்தல், மகளிர் சுகாதார வளாகங்கள், பள்ளிக்கூடம் மற்றும் அங்கன்வாடிகள் கழிவறைகள் போதிய தண்ணீர் வசதியுடன் செயல்படுவதை உறுதி செய்தல், திறந்தவெளி கழிப்பிடமாகப் பயன்படுத்தப்பட்ட இடங்களைப் புனரமைத்து, சமுதாய ஒத்துழைப்போடு புதுமைப் பூங்காக்கள் அமைத்தல், கழிப்பிடங்களை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இந்த நிதியாண்டின் இறுதிக்குள் ஆறு கடற்கரையோர மாவட்டங்களில் ஆறு கிராமங்கள் வீதம் 36 கிராம ஊராட்சிகளில் முழு சுகாதாரத்துடன் கூடிய திறந்த வெளி கழிப்பிடமில்லா கிராமங்களாக சமுதாய ஒத்துழைப்புடன் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்திலிருந்து கொள்முதல் தணிக்கைக் குழு வருகை

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்திலிருந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைத் தணிக்கை செய்ய, 16.11.2016 முதல் 25.11.2016 வரை ரோமில் இருந்து திரு. உமர் நிக் அவர்களும் மற்றும் திரு. பாஸ்கர் ராபர்ட் ஜான் அவர்களும் வருகை தந்து, மாவட்டவாரியா சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கொள்முதல் சார்ந்த தணிக்கை மேற்கொண்டனர்.

இதில் திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஊராட்சி அளவிலான உட்கட்டமைப்புகள், செயற்கைப் பவளப் பாறைகள் கடலில் நிறுவுதல், இளைஞுகளுக்கான தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளித்தல், தொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பிற ஆவணங்களை ஆய்வு செய்து, அதில் சிறு சிறு குறைபாடுகள் இருந்ததைக் கண்டறிந்து அதனை சரி செய்ய ஆலோசனைகளை வழங்கினர். ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் மூலம் மாநில அளவில் கொள்முதல் செய்வதற்கான வழிமுறைகள் குறித்த கருத்துப் பட்டறை

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் மற்றும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் இணைந்த கொள்முதல் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து, மாநில அளவிலான கருத்துப் பட்டறை சென்னையில் கடந்த 28.11.2016 முதல் 02.12.2016 வரை நடைபெற்றது. இக்கருத்துப் பட்டறையில் இந்தியாவில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டத்தில் இருந்தும் அது சார்ந்த மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் இருந்து திட்ட கூடுதல் இயக்குநர் தலைமையில், நிதி மேலாளர், செயற்பொறியாளர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் கணக்கு உதவியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் கீழ்கண்ட தலைப்புகளில் விவாதம் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.

1. கொள்முதல் கோட்பாடுகள், கொள்முதல் முறைகள் மற்றும் கொள்முதல் தயார் செய்தல்
2. ஏல ஆவணம் தயார் செய்தல் (Bid Documentation Preparation)
3. ஏல மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்தல்
4. ஆலோசனை சேவைகளுக்கு கருத்துரு வேண்டுதல் (Request for Proposal) தயார் செய்தல்
5. ஆலோசனை சேவையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துதல்
6. ஒப்பந்த மேலாண்மை அறிக்கை தயார் செய்தல்
7. சமூக கொள்முதல் அறிக்கை

இறுதியாக கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் நன்றியுரையுடன், இக்கருத்தரங்கு நிறைவு பெற்றது.

சமுதாய உட்கட்டமைப்புப் பணிகள் துவக்க விழா – ஒரு செய்திக் குறிப்பு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட மீன் வலைப் பின்னும் கூடம், உலர் மீன் களம் மற்றும் கூட்டமைப்பு அலுவலகம் ஆகிய கட்டுமானப் பணிகள் துவக்கத்திற்கான பூமி பூஜை விழா கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் தலைமையில், 25.11.2016 மற்றும் 26.11.2016 ஆகிய இருநாட்கள் காஞ்சிபுரம் மாவட்டம் சூலேரிக்காடு, சின்னக்கடலூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம் பனிச்சமேடு, நொச்சிக்குப்பம், கூனிமேடு மற்றும் கடலூர் மாவட்டம் சிங்கிரிக்குடி கிராமம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இந்தப் பணிகள் யாவையும் விரைவுபடுத்தி தரத்துடன் புதிதாக வடிவமைக்கப்பட்ட முறையில் கட்டுமானப் பணிகளை இந்த நிதியாண்டிற்குள் முடித்திட அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களின் திட்ட செயலாக்க அலுவலர்கள், திட்ட மேலாண்மை அலகின் செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்திலிருந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு வருகை

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்திலிருந்து (ரோம்) சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைப் பார்வையிட திரு. முரிசோனா வர்ரா, திரு. பிரான்ஸ்கா மற்றும் பிற உறுப்பினர்கள் கொண்ட குழு 14.11.2016 மற்றும் 15.11.2016 ஆகிய இரண்டு நாட்கள் வருகை புரிந்தனர். இக்குழுவினர் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பழவேற்காடு தலைச்சுமை மீனவப் பெண்கள், நடுக்குப்பம் மீன் விற்பனை சங்கத்தின் உறுப்பினர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடினர்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கே. ஆர். குப்பம் JLC சாய் பியூட்டி பார்லரின் செயல்பாடுகள் ஆய்வு செய்த பின்னர், புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அனைத்து செயல்பாடுகளையும் கேட்டறிந்து அதனை ஆய்வு செய்தனர். சமுத்திரம் கூட்டுப் பொறுப்புக் குழுவின் கால் மிதியடி தயாரிக்கும் தொழிலின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். கருமாரியம்மன் கறவை மாடு பயனாளிகளிடம் இடர்பாடு மற்றும் நன்மைகளைப் பற்றி கேட்டறிந்தனர்.

மேலும் பரமன்கேணி மீன் விற்பனைச் சங்க உறுப்பினர்களிடம் விடுதலைக் கடன் நிதி குறித்த செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் திட்ட மேலாண்மை அலகின் முதுநிலை ஊரக நிதி மேலாளர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர், மாவட்டச் செயலாக்க அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை மாற்றுவது குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

மத்திய அரசின் ரூ. 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாததாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இத்திட்டம் செயல்படுத்தப்படும் கடற்கரையோர மாவட்டங்களில் 17.11.2016 மற்றும் 18.11.2016 ஆகிய இரு நாட்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் கிராமப்புற பெண்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டு, பழைய ரூபாய் நோட்டுக்களை வங்கி மற்றும் தபால் அலுவலகங்களில் மாற்றிக் கொள்வது குறித்தும், வங்கிக் கணக்கு கார்டுகள் மூலம் ரொக்கப் பணமில்லாத பரிவர்த்தனைகளை மேற்கொள்ள தயார்படுத்திக் கொள்வது குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

எதிர்காலத்தில் தானியங்கி கருவி கார்டுகள், கடன் அட்டைகள், வங்கிக் கணக்கு அட்டைகள் போன்ற இணையதள வழியான பரிவர்த்தனைகளை கிராமப்புற பெண்கள் எளிதாக மேற் கொள்ள பயிற்சிகள் வழங்கியும், ரொக்கப் பணமில்லாத பொருளாதாரத்தை உருவாக்கிட சமுதாய ஒத்துழைப்பை முழு மனதோடு வழங்கிடவும் மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டது. ■

அரசியலமைப்பு சட்ட நாள் உறுதிமொழி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப் படும் கடற்கரையோர கிராமங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், கூட்டுவள மையப்பணியாளர் கள், மாவட்டச் செயலாக்க அலுவலர்கள், திட்ட மேலாண்மை அலுவலர்கள் தத்தம் அலுவலகத்தில் 25.11.2016 காலை 11.00 மணிக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது நம்பிக்கை யும், அதை செயல்படுத்துவதற்கான கடமை மற்றும் பொறுப்பு கள் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உள்ளது என்பதை அறிவுறுத்தி அரசியல் சட்ட நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. ■

காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் காப்பீடு திட்டத்தின் கீழ் பயன் பெற்ற பயனாளி திருமதி. சுசீலா தன் அனுபவத்தைக் கூறுகையில், 'எனது பெயர் சுசீலா, நான் காஞ்சிபுரம் மாவட்டம், கடலூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் கீழ் செயல்படும் கங்கையம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறேன். சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படுத்தப்படும் நுண்காப்பீடு திட்டத்தின் கீழ் வீட்டிற்கான காப்பீடு திட்டத்தில் ரூ. 20/– செலுத்தி, எனது வீட்டிற்கு காப்பீடு செய்திருந்தேன். சில மாதங்களுக்கு முன் எனது வீடு தீப்பிடித்து எரிந்து விட்டதால் பொருட்கள் அனைத்தும் எரிந்து சேதமாகி விட்டன. இதுபற்றி எனது குழுத் தலைவியிடம் தெரிவித்து, காப்பீடு அதிகாரி மூலம் காப்பீடு பெறுவதற்கான படிவத்தை நிறைவு செய்து, உரிய ஆவணங்களுடன் காப்பீடு நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தேன்.

அதற்குப் பின் காப்பீடு நிறுவனத்திலிருந்து அலுவலர் வந்து ஆய்வு செய்து விட்டு, இழப்பீடு தொகையாக ரூ. 18,354/– எனக்குக் கிடைத்தது. அந்தப் பணத்தில் புதிய கூரை வீடு கட்டி முடித்தேன். எனது வீட்டை காப்பீடு செய்ததினால் இப்பணம் கிடைத்தது. இதற்கான பணத்தைப் பெற்றுத் தந்த காஞ்சிபுரம் மாவட்ட சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ■

பழவேற்காடு மீன் – இறால் வியாபார குறுந்தொழில்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட பழவேற்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில், கடந்த 16.04.2016 முதல் பழவேற்காடு மீன், இறால் வியாபார குறுந்தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலின் பயனாளிகளான திருமதி. மெர்சி, திருமதி. சந்திரகலா ஆகியோர் இந்தத் தொழிலினை சிறந்த முறையில் செய்து, இதுவரையில் ரூ. 90,72,995/– வரை விற்பனை செய்துள்ளனர்.

மேலும் பயனாளிகள் இத்தொழிலினை திறம்பட செய்து அதிக இலாபம் அடைந்ததன் மூலம் இத்தொழிலுக்காக வழங்கப்பட்ட கடன் தொகையான ரூ. 2,50,000/– முழுவதையும் கடன் திருப்பம் செய்துள்ளனர். மேலும் இந்நாளது வரை இத்தொழிலினை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றனர். ■

விடுதலை மீட்டு கடன் மூலம் கடனிலிருந்து விடுபட்ட கதை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் தென்னிந்திய மீனவ சங்கத்தின் வழியாக பனிச்சமேடு குப்பம், கைப்பாணிக்குப்பம், அனுமந்தை குப்பம், பிள்ளைசாவடி குப்பம், கூனிமேடு குப்பம், மண்டவாய் புதுக் குப்பம் ஆகிய 6 மீனவ சங்கங்களுக்கு ரூ. 74,90,000/– விடுதலைக் கடனாக வழங்கப்பட்டது.

பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்ய மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வாங்க, பெரிய வியாபாரிகள், இடைத்தரகர்கள், கந்துவட்டி தரகர்கள் மூலம் பணம் பெற்று, தொழில் செய்து வந்தனர். இதனால் மீனவ மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை. தொடர்ந்து அவர்களின் பொருளாதாரம் மேம்படவில்லை.

மீனவர்கள் பிடித்த மீன்களின் விலையை இடைத்தரகர்கள் விலை நிர்மாணிக்கும் நிலை இருந்து வந்தது. இதனை அறிந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், மீனவர்களின் வாழ்வாதாரம் உயர மீனவர்களை இடைத்தரகர்கள், கந்து வட்டிக்காரர்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து மீட்க விடுதலை கடன் மீனவ சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

மீனவ உறுப்பினர்களை ஒரு சங்கமாக ஒருங்கிணைத்து, நிர்வாகிகளை தேர்வு செய்து, வங்கி கணக்கு துவங்கி, கூட்டங்கள் முறையாக நடத்தப்படுகின்றன. மீனவ மக்கள் பெற்ற கடனை முழுமையாகத் திருப்பி செலுத்தி, தற்பொழுது மீனவ சங்கங்கள் மூலம் கடன் பெற்று, தொழில் செய்து வருகின்றனர். தற்பொழுது இவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது.

இந்த அரிய புதிய முயற்சியை மேற்கொண்டு, எங்களை கந்து வட்டிக்காரர்களிடமிருந்து மீட்டு, எங்களுக்கு விடுதலை கடன் வழங்கிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை சமர்பிக்கின்றோம். ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில், சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மக்களே முதன்மை

புது வாழ்வு திட்டம்

வேளாண் வணிக மையம் அமைத்தல் பயிற்சி

தேனி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வேளாண் வணிக மையம் அமைத்தல் பயிற்சி 18.11.2016 மற்றும் 19.11.2016 ஆகிய இரண்டு நாட்கள் தேனியில் உள்ள ABM Grande ஹோட்டலில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் தூத்துக்குடி, விழுப்புரம், வேலூர், சேலம், திருவண்ணா மலை, ராமநாதபுரம், காஞ்சிபுரம், நாமக்கல், திருவள்ளூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களின் புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் அணித்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், வேளாண் விளைபொருட்களுக்கு நியாமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே ஆகும். இதன் மூலம் விவசாய விளைபொருட்களுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் உற்பத்தியாளருக்கே நியாயமான விலை கிடைப்பதோடு, அன்றைய விலைக்கு வேளாண் வணிக மையத்தில் வாங்கிக் கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் வணிக மையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்த இப்பயிற்சி திட்டமிடப்பட்டது.

இப்பயிற்சியை மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, வேளாண் வணிக மையம் அமைத்தலின் நோக்கத்தை எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியில் தேனி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. செல்வராஜ், தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. செ. கழுகாசலமூர்த்தி, வாழ்வாதார ஆலோசகர் திரு. தங்கச்சாமி, வேளாண் ஆலோசகர் திரு. சுப்பிரமணி, தொழில் வளர்ச்சி வல்லுநர் திரு. புருஷோத்தமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாப்கின் தயாரிப்பு ஒத்தத் தொழில் குழு உற்பத்தி மையம்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்திலுள்ள அமரம்பேடு ஊராட்சியில் வீனஸ் நாப்கின் தயாரிப்பு ஒத்தத் தொழில் குழுவின் செயல்பாட்டினை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. இரா. கஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், மாநில கூட்டாண்மை வல்லுநர் டாக்டர். புருஷோத்தமன், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. காட்டுராஜா, திரு. சிவப்பிரகாசம் மற்றும் திட்டப் பணியாளர்கள், ஒத்தத் தொழில் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதூர் நாடு களப்பகுதியில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், புதூர் நாடு பகுதியில் புதுவாழ்வு திட்டத்தின் 24.11.2016 அன்றுசெயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். ஏ. இராமன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். முதலில் 500 மலைவாழ் மகளிருக்கு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலம் 5000 நாட்டுக் கோழிகள் வழங்கப் பட்டதையும் மற்றும் நாட்டுக் கோழி முட்டை விற்பனை நிலையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் தகரகுப்பம் ஊராட்சியிலுள்ள சிறுதானிய உற்பத்தித் தொழில் குழுவிற்கு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலம் வழங்கப்பட்ட கல் நீக்கும் இயந்திரம், அரவை இயந்திரம் மற்றும் தரம் பிரிக்கும் இயந்திரங்களின் செயல்பாட்டைப் பார்வையிட்டு, தொழில் குழு உறுப்பினர்களிடையே அதன் பயன்களைக் கேட்டறிந்தார். மேலும் அங்கு விளையும் சாமை மற்றும் தினைகளை கொள்முதல் செய்து, தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிக்க கொள்முதல் நிலையம் அமைக்க அறிவுரை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து மகளிர் குழுக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர் தொழில் செய்ய கடனுதவி வழங்கும் விழாவிற்கு தலைமையேற்று 160 பயனாளிகளுக்கு ரூ. 17,50,000/- கடன் உதவி வழங்கினார். பின்னர் அரும்பலபட்டு கிராமத்தில் கோழி வளர்ப்புப் பயனாளிகளை சந்தித்து, கோழி வளர்ப்புகளை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

வேலூர் மாவட்டம்

இந்நிகழ்வின் போது, திருப்பத்தூர் சார் ஆட்சியர், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் திரு. பி. தணிகைவேல், திரு. எஸ். சுபாஷ் சந்திரன், வேளாண் ஆலோசகர் திரு. டி. எஸ். பி. சம்பத், ஆலங்காயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வேளாண்மை துணை இயக்குநர், திருப்பத்தூர் வட்டாட்சியர், ஒருங்கிணைப் பாளர்கள் திரு. எல். இராஜகோபால், திரு. வெங்கடாசலம், திரு. உத்திரகுமார் மற்றும் மகளிர் குழுக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். ■

மாற்றுத் திறனாளிக்கான வீட்டு உபயோகப் பொருட்கள் பயிற்சி நிறைவு

சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்கும் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தேனி, மதுரை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 24 மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர். ஒரு மாதமாக நடைபெற்ற இப்பயிற்சி கடந்த மாதம் 30.11.2016 அன்று முடிவடைந்தது.

இதன் நிறைவு விழாவிற்கு மாநில மாற்றுத் திறனாளி மற்றும் நலிவுற்றோர் வல்லுநர் திரு. பெஞ்சமின் விக்டர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், கலந்து கொண்டு, பயிற்சி முடித்தவர்களுக்கு பயிற்சி உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர்.

பொது இ–சேவை மையப் பொறுப்பாளர்களுக்குப் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் அயோத்தியாப்பட்டிணம், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி, தலைவாசல், வாழப்பாடி மற்றும் ஏற்காடு ஆகிய ஆறு ஒன்றியங்களில் பொது இ–சேவை மையங்களில் மின் ஆளுமைத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

பொது இ–சேவை மையத்தின் செயல்பாட்டினை மேம்படுத்திடும் வகையில், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் உள்ள அரங்கில் கடந்த 01.12.2016 அன்று புதுவாழ்வு திட்ட மின் ஆளுமை சேவை மையப் பொறுப்பாளர்களுக்கு, Online Patta Transfer, வருவாய்த் துறையின் கூடுதல் திட்டங்கள் மற்றும் Vallet Recharge பற்றிய பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் மாவட்ட திட்ட அலுவலர் தலைமையேற்று இது தொடர்பான ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கினார். மேலும், இப்பயிற்சியின் போது, மாவட்ட மின் ஆளுமை மேலாளர்கள், சேலம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி அவர்கள் மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. மணிகண்டன் ஆகியோர் உடனிருந்து மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர். ■

சேலம் மாவட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் பார்வையிடல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட இமாச்சல பிரதேச ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் திரு. ஓம்கர் சர்மா (Secretary (RD) - cum-Chairman, EC, SRLM), திரு. சு. செல்வம் (Director-cum-Ex. Officio Secretary (RD & PR) மற்றும் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இரண்டு உதவி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் மூன்று திட்ட இயக்குநர்கள், ஏழு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் என 18 நபர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு 15.11.2016 முதல் 17.11.2016 வரை மூன்று நாட்கள் வருகை புரிந்தனர்.

இக்குழுவினர் இரண்டு குழுக்களாகப் பிரிந்து, முதல் நாளில் புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி களப்பகுதிக்குட்பட்ட மேல் நாச்சிப்பட்டு ஊராட்சி மற்றும் செங்கம் ஒன்றியம் அஸ்வநாகசுரணை ஊராட்சி ஆகியவற்றில் செயல் படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு, சமூக தணிக்கைக் குழு சுய உதவிக் குழுக்கள், ஒத்தத் தொழில் குழு மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற அமைப்புகளைப் பார்வையிட்டு, திட்டத் தின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொண்டனர். மேலும் பயனடைந்த நபர்களை நேரில் சந்தித்து அவர்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் பற்றி கண்டறிந்தனர்.

இரண்டாம் நாள் ஜவ்வாது மலை ஒன்றியம் ஆட்டியானூர், நல்லாப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு, சமூகத் தணிக்கைக் குழு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் Cluster Level Federation போன்ற அமைப்புகளைப் பார்வையிட்டு, திட்டத் தின் செயல்பாடுகளைப் பற்றி தெரிந்து கொண்டனர்.

மூன்றாம் நாள் அன்று மாவட்ட மகமையின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கள பயணத்தின் முடிவில் அக்குழுவினர் மக்களின் பங்களிப்பு மற்றும் ஈடுபாடு இத்திட்டத்தில் மிக அருமையாக உள்ளது எனக் கூறினார்கள். இவ்வாறான ஈடுபாட்டை வேறு எங்கும் பார்த்ததில்லை என பாராட்டினார்கள்.

மேலும் மாநில திட்ட அலுவலகத்திலிருந்து வந்த 3 மாநில வல்லுநர்கள், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சி. செவத்தான், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மேற்குறிப்பிட்ட களப்பயணம் நல்ல முறையில் வெற்றி அடைய சிறப்புடன் செயலாற்றினார்கள்.

இரண்டாம் திட்டத்திற்கான முன்னோடி திட்ட செயல்பாடுகள்

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் இரண்டாம் திட்ட செயல்பாடுகளுக்கு (TNSRTP) முன்னோடி திட்டமாக செயல்படுத்த மதிப்பிற்குரிய ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் மூன்று முன்னோடி திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக் கப்பட்டு, தற்போது வரை இவைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

அவற்றில், புதிய சமுதாய தொழில் முனைவோரை உருவாக்குவது, சமுதாய பண்ணைப் பள்ளிகள் நடத்துவது மற்றும் கோசாலை மூலம் நாட்டுப் பசுமாட்டில் இருந்து கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு மதிப்புக் கூட்டல் செய்தல் ஆகிய மூன்று திட்டங்களிலும் முதல் கட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை விருப்பமுள்ள 120 புதிய சமுதாய தொழில் முனைவோர்கள் கண்டறியப் பட்டு, அவர்களுக்கு சிறு குறு நடுத்தர தொழில் முனைவோர் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட தொழில் மையம், தாட்கோ உட்பட பல்வேறு அரசு நிறுவனங்களின் மூலம் இவர்களுக்கு தொழில் தொடங்க மானியம் கடன் வழங்குவதற்கு கலந்துரையாடல் முகாம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. புதிய தொழில் முனைவோர்களை அடுத்தகட்ட நடவடிக்கைக்கு எடுத்துச் செல்லும் செயல்பாடுகள் நடைபெற்று வருவதுடன், சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் நடத்துவதற்கு 10 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சியிலும் 20 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆடு வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்க ஒவ்வொரு ஊராட்சியில் இருந்தும் இரண்டு பயிற்றுநர்கள் (SPARKS) தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மூலம் இதுவரை சாணப் பரிசோதனை, குடல் புழு நீக்கம், நோய் தடுப்பூசி மற்றும் உன்னி நீக்கம் உட்பட 5 வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. ■

மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் புதுவாழ்வு திட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள்

தருமபுரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 6 ஒன்றியங்களில் 10,252 மாற்றுத் திறனாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுத் தரப் பபட்டுள்ளதுடன், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தனிநபர் கடனாக ரூ. 12 கோடியே 30 லட்சம் வாங்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்து வதற்காக இரண்டாம் முறையாக ரூ. 2,432 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ. 3 கோடியே 64 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இல்லம் சார்ந்த மறுவாழ்வு பயிற்சி தேவைப்படும் 489 குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தசையியக்கப் பயிற்றுநர்களைக் கொண்டு, தசையியக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட 638 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்கு ஆதார நிதியாக ரூ. 1 கோடியே 27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 254 சிறப்பு சுய உதவிக் குழுவில் உள்ள 1,262 உறுப்பினர்களுக்கு குழு கூட்டமைப்பு தொழில் முனைவோர் கடனாக ரூ. 2 கோடியே 54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவ முகாம்கள் நடத்தி, அதன் வாயிலாக 524 மனநில பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மன வளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்து மாத்திரைகள் போன்றவை வழங்கப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்டத்தில் 03.12.2016 அன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கலை அரங்கத்தில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தின விழா நடைபெற்றது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள் கலந்து கொண்டு, 69 பயனாளி களுக்கு ரூ. 8. இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். ஆர். முருகன், மாநில பட்டுக் கூட்டுறவு உற்பத்தி யாளர் சங்கத் தலைவர் திரு. எம். ஜி. மணிவண்ணன், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய துணைத்தலைவர் திரு. டி. எம். பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், வருவாய் கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, தருமபுரி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சீனு. நாராயணன், சென்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தருமபுரி மாவட்டம்

உலக கழிப்பறை தின நிகழ்வுகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 156 ஊராட்சிகளிலும் உலக கழிப்பறை தின அனுசரிப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் நோய்கள், சுகாதார சீர்கேடு மற்றும் பாதுகாப்பின்மை, பொருளாதார பாதிப்பு ஆகியவை பற்றியும் விளக்கிக் கூறப்பட்டது. மேலும் சுத்தமான குடிநீர் மற்றும் கழிப்பறையின் அவசியம் குறித்தும் கூறப்பட்டது. கழிப்பறையை பயன் படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைவதோடு, அவர்களின் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்ற கருத்தும், அத்துடன் மக்கள் குறிப்பாக பெண்கள், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றம் சுயமதிப்பினையும் உறுதிபடுத்தப் படுவதையும் விளக்கிக் கூறப்பட்டது.

அனைத்து இல்லங்களிலும் கழிப்பறை வசதி ஏற்படுத்துவதே உலக கழிவறை தினத்தின் முக்கிய நோக்கமாகும். 'அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதியை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வசதியை மேம்படுத்த முடியும்' என்ற 2016ஆம் ஆண்டின் உலக கழிப்பறை தினத்தின் கருப்பொருள் பற்றி அனை வருக்கும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் கிராம கழிப்பறை வரைபடம், பள்ளி மாணவர் களுக்கான கழிப்பறை விழிப்புணர்வு ஊர்வலம், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சியாக மாற்றுவோம் என்ற கையெழுத்து இயக்கம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சிகளை புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட திட்ட மேலாளர் திரு. சே. பாஸ்கரன், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. அ. பிரபாகர், திரு. இரா. குமரேசன், அணித்தலைவர் கள், வழிநடத்துனர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சமூக தணிக்கைக் குழுக்கள், ஒத்தத் தொழில் குழுக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாவட்ட மகமை மற்றும் வட்டார மகமை ஆகியவற்றின் உறுப்பினர் கள் கலந்து கொண்டனர்.. ■

திருநெல்வேலி மாவட்டம்

ஸ்வாவ்லம்பன் சுகாதார காப்பீட்டுத் திட்டம் (Swavlamban Health Insurance Scheme)

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் உடன் கூட்டாக மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணையால் நிறுவப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தலின் டிரஸ்ட் ஃபரைட் கீழ் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டு அமைச்சகம் மூலம் மாற்றுத் திறனாளிகள் சுகாதார காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது பார்வையற்றோர், பார்வை குறைபாடுடையோர், தொழுநோயால் பாதிப்படைந்து குணமடைந்தோர், கேட்கும் திறன் குறைபாடுள்ளோர், அங்க ஹீனமடைந்தோர், மன வளர்ச்சி குறைபாடுடையோர், மனநலம் குன்றியவர்கள் மற்றும் இவ்வகையான மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார காப்பீட்டுத் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஒரு வருடத்திற்கு ரூ. 2 இலட்சம் வரையிலான குடும்ப மிதவைக் காப்பீடு
- ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரர், கணவன் / மனைவி மற்றும் விண்ணப்பதாரரை சார்ந்து வாழும் 2 குழந்தைகள் கவரேஜ்
- அனைத்து வயதினருக்கும் ஒரே பிரீமியத் தொகை
- 0 முதல் 65 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தில் சேரலாம்
- புரொபசல் வடிவில் சுய உறுதிமொழி அடிப்படையில் ரூ. 3 இலட்சம் மற்றும் அதற்குக் கீழ் குடும்ப வருடாந்திர வருவாய் கொண்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்குப் பொருந்தும்.
- காப்பீட்டிற்கு முந்தைய மருத்துவப் பரிசோதனைகள் தேவையில்லை
- பிரீமியம் ரூ. 3100/– + பொருந்துமாறு சேவை வரி, காப்பீடு செய்த தொகையில் இருந்து ரூ. 10% மட்டும் பிரீமியம் பெறப்படும். காப்பீடு செய்த மாற்றுத் திறனாளிகளிடமிருந்து பிரீமியம் பங்களிப்பு ஒரு நபர் / குடும்பத்திற்கு (வரி உள்பட) சுமார் ரூ. 357/– ஆகும்.
- கரக்ஷன் தெரபிக்கான வெளிநோயாளி பிரிவு கவர் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 10,000/– வரை ஆகும்.
- முந்தைய / பிந்தைய மருத்துவமனையில் செலவுகள் வரம்பிற்கு உட்பட்டு கவராகும்.

சேருவதற்கான நடைமுறை

- ரூ. 357/– பிரீமியம் தொகையுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவம்
- பாலிசியில் இடம் பெறும் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
- மாற்றுத் திறனை நிரூபிக்கும் சான்றிதழ் (DisabilityCertificate)
- புகைப்பட அடையாள அட்டை அதாவது வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் போன்றவற்றின் நகல்
- சேர உத்தேசித்தவர்களின் வங்கி விபரங்கள் கிடைக்கும் பட்சத்தில் கேன்சல் செய்த காசோலையின் நகலுடன் கணக்கு எண், வங்கியின் பெயர், IFCS கோடு முதலியன

கோரிக்கை செய்யும் நடைமுறை

- தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, காப்பீடு பெற்ற நபர்கள் பணம் செலுத்தாமல் சிகிச்சை பெறக் கூடிய மருத்துவமனைகளின் நெட்ஒர்க்–ஐ உருவாக்கும்.
- காப்பீடு பெற்ற எந்தவொரு நபரும் நெட்ஒர்க்கிற்கு வெளியே சிகிச்சை பெற விரும்பினால், மூன்றாம் தரப்பு நிர்வாகத்தின் (TPA) அனுமதி பெறுதல் கட்டாயமாகும். அவசர கால சிகிச்சை விஷயத்தில் இந்த அனுமதி தேவையில்லை.
- இந்த பாலிசி மூலம் முன்பு இருந்த உடல் சுகவீனத்திற்கு சிகிச்சைப் பெறலாம். முன்னர் இருந்த உடல் குறைபாடுகளுக்கான சிகிச்சையை (இந்த பாலிசியின் நோக்கத்திற்காக சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி உடல் ஊனத்தை உண்டாக்கும், சுகவீனம் அல்லது அதன் நிலை தொடர்புடைய உடல் குறைபாடு இணைந்துள்ள மருத்துமனையில் மட்டுமே பெற முடியும். இதற்கு மூன்றாம் தரப்பு நிர்வாகத்திடம் முன் அனுமதி பெற வேண்டும்.
- கோரிக்கை செய்யும் நேரத்தில், உரிய அதிகாரியால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழை மூன்றாம் தரப்பு நிர்வாகத்திடம் (TPA) சமர்ப்பிக்க வேண்டும்.

மேலுமான தகவல்களுக்கு தொடர்பு கொள்க

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,

டோல் ஃபிரீ எண். **1800 209 1415**

மின்னஞ்சல் : swavlamban@newindia.co.in

ரொக்கம் அல்லாத கோரிக்கைகள் தீர்வுக்கான தகவல்கள் - மூன்றாம் தரப்பு நிர்வாகம் (TPA)

மேற்கு மண்டலம் : MD, இந்தியா ஹெல்த் கேர் சர்வீசஸ் பிரைவேட் லிட்.,

டோல் ஃபிரீ எண். **1800 233 1166, 1800 233 4505**

வடக்கு மண்டலம் : ரக்ஷா பிரைவேட் லிட்.,

டோல் ஃபிரீ எண். **1800 180 1444**

தெற்கு மண்டலம் : விடல் ஹெல்த்,

டோல் ஃபிரீ எண். **1800 425 8885**

கிழக்கு மண்டலம் : மெடிக்கேர் சர்வீசஸ் பிரைவேட் லிட்.,

டோல் ஃபிரீ ண். **1800 345 3339, 1800 345 3322** ■

செம்மறி ஆடுகளில் நோய் தடுப்பு முறைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கால்நடைகள் வளர்ப்பு, அவைகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்த கட்டுரையின் தொடர்ச்சி...

நீலநாக்கு நோயினைக் கண்டறியும் முறை

நோய்க்கான அறிகுறிகளைக் கொண்டும், நோய்ப்பரவும் காலம், விதம், பாதிப்பு ஆகியனவற்றைக் கொண்டும், நோயினைக் கண்டறியலாம் பரிசோதனைக் கூடங் களில் நோய் உண்டாக்கும் கிருமியின் எதிர்ப்புப் பொருள் இரத்தத்தில் உள்ளதா என்பதனைக் கொண்டு, நோய் ஏற்பட்டு உள்ளது எனக் கண்டறியலாம். ஏ.ஜி.பி.டி., எலிசா போன்ற பரிசோதனை முறைகள் மூலமாகவும் நோய் எதிர்ப்புப் பொருளினைக் கண்டறியலாம். நோய் உண்டாக்கும் கிருமியினை, கோழிக்கரு முட்டையில் வளர்ப்ப தின் மூலமும், திசு வளர்ப்பு மூலமாகவும் கண்டறியலாம்.

இந்நோய் மிதமான நிலையில் ஏற்படும் போது, கோமாரி, தொற்றும் நோய், கொப்புள நோய், கொள்ளை நோய், செம்மறி ஆட்டம்மை ஆகியனவற்றிலிருந்து பிரித்து அறிதல் அவசியம். மான்களில் ஏற்படும் இரத்தக் கசிவு நோய்க் கிளர்ச்சி நோயினை, நீலநாக்கு நோய்க் கிருமியிலிருந்து சாதாரண பரிசோதனைகளின் மூலம் பிரித்தறிவது கடினம்.

நோய் தீர்ப்பும் தடுப்பும்

நோய்ப் பரவ உதவும் க்யூளிகாய்ட்ஸ் கடிக்கும் ஈக்களை கட்டுப்படுத்துதல் நோயினைக் கட்டுப்படுத்து பெரிதும் உதவும். இதில் ஓரளவு சிரமம் உள்ளது. ஏனெனில் இவ்வகை ஈக்கள், பல்வேறு இடங்களில் பரவியும், காற்று அடிக்கும் திசையில் பரவவும் வாய்ப்புண்டு. நோயிலிருந்து மீண்ட ஆடுகளில் நோய்க்கிருமி சில மாதங்கள் வரையில் கூடக் காணப்படலாம். தடுப்பு மருந்துகள், மேலை நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தடுப்பு மருந்துகளில் சில குறைகளும் உள்ளன. அதாவது சின்ன ஆடுகளில் கருச்சிதைவும், உற்பத்தித் திறன் பாதிப்பும் ஏற்படலாம். ஆகவே நவீன நுண்ணறிவியல் தொழில் நுட்ப முறையினைக் கொண்டு தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டு வருகிறது.

பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், வேப்பிலைகளை எரித்து புகையுண்டாக்கி பூச்சிக்களை விரட்டுதல், பாதிக்கப்பட்ட ஆடுகளை தனியே பிரித்தல், நோய் தீர்க்கும் நுண்கிருமி எதிர்ப்பு மருந்துகள், டெர்ராமைசின், என்ரோசின், சிப்ரொப்ளாக்ஸசின் ஆகிய மருந்துகளை ஊசி முலம் அளித்தல், நோயிலிருந்து காப்பாற்ற உதவலாம்.

அடைப்பான் நோய்

அடைப்பான் நோய், செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் மாடுகளைத் தாக்கி இறப்பினை ஏற்படுத்தும் முக்கிய நோய். அனைத்து வயதினையுடைய கால்நடைகளும், பல்வேறு இனங்களும், ஆண், பெண் இருவகை இனங்களிலும், பொதுவாக ஏற்படும் ஒரு முக்கிய நோய். இது பாதிக்கப்பட்ட புற்களை மேயும் போது கிருமி நீக்க கருவினை உட்கொள்வதால் ஏற்படுகிறது. எனவே மேய்ச்சல் கால்நடைகளை வெகுவாக பாதிக்கும். பாதிக்கப்பட்ட கால்நடைகளின் மண்ணீரல் வீங்குவதால், இந்நோய்க்கு மண்ணீரல் காய்ச்சல் என்றும் ஒரு பெயர் உண்டு. நோயினால் இறந்த ஆடுகளின் இயற்கைத் துவாரங்களில் இரத்தம் கசிந்து காணப்படும். முக்கியமாக காரத்தன்மையுடைய மண்ணில் இந்நோய்க் கிருமிக்கரு அதிக அளவில் காணப்படும். இந்நோய் உண்டாக்கும் கிருமியினை பேசில்லஸ் ஆந்திராஸிஸ் எனக் கூறுவர்.

இந்நோய்க் கிருமிக்கரு, மிகவும் திடமானவை. பல்வேறு தட்பவெப்ப நிலைக்கும் தாக்குப் பிடிக்க வல்லவை. இது கடிக்கும் பூச்சிகள் மூலமாகவும் பரவ வாய்ப்புண்டு. குறிப்பாக கோடை காலங்களில் இக்கிருமி வெகுவாகப் பெருகி மழைக்காலத்திற்கு முன்பாக இந்நோயினை உண்டாக்கும். பாதிக்கப்பட்ட மண்ணில் பல ஆண்டுகள் நோய்க்கிருமிக்கரு தங்கி நோயினை உண்டாக்கும். இந்நோய் கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்கும் பரவும் நோய்களில் மிகவும் முக்கியமானது. கால்நடையினைச் சார்ந்த தோல், ரோமம் போன்றவற்றுடன் தொடர்புடைய மனிதர்களுக்கும், கால்நடை மருத்துவர் ஆகியோருக்கும் இந்நோய் பரவ வாய்ப்புண்டு.

கால்நடைகள் இறப்பதன் மூலமும், தடுப்பு மருந்து உபயோகம், மனிதர்களைத் தாக்கக் கூடிய நிலை ஆகியன இந்நோய்க்கு முக்கியத்துவம் அளித்து, நோய்த் தடுப்பில் பெருத்த செலவினை உண்டாக்குகிறது. இந்நோய்க் கிருமியினை, உயிர் பயங்கரவாதத்திற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டு வந்தது. சமீபத்தில் அமெரிக்கா வர்த்தக மையமும் மற்றும் முக்கிய கட்டிடங்கள் தாக்கப்பட்டதன் பின் விளைவாக, ஆந்திராக்ஸ் கிருமியினை அச்சுறுத்தலுக்காக மீண்டும் பயன்படுத்தியுள்ளனர்.

நோய்க்கான அறிகுறிகளும்

நோயின் தீவிரத்தினைப் பொருத்து, நோய்க்கான அறிகுறிகள் மாறுபடும். நோய் அறிகுறிகள் தோன்ற ஒன்றிலிருந்து, 14 நாட்கள் கூட ஆகும். ஓரிரு ஆடுகள் எந்தவித அறிகுறிகளும் இன்றி இறக்க நேரிடலாம். நோய் தோன்றுவது மிகவும் வேகமாகக் காணப்படும். காய்ச்சல் 104 முதல் 106 செல்ஸியஸ் வரை காணப்படும். பாதிக்கப்பட்ட ஆடுகள் தீவனம் எடுக்காமலும், சோர்ந்தும் காணப்படும். சில மணி நேரங்களில் இறந்துவிடும். மிதமான வகை நோயில் வயிறு வலியுடனும், இரத்தம் கலந்தும் கழிச்சலுடனும் சில ஆடுகள், முரட்டுத்தனமாகவும், தலையினை ஆட்டிக் கொண்டும், தசைகள் நடுங்கியவாறும் காணப்படும். அசைபோடுவது நின்று பின்பு நாசியிலிருந்து நீர் கொட்டியும், சாணம் மற்றும் சிறுநீரில் இரத்தம் கலந்தும் காணப்படும். ■

(தொடரும்)

- முனைவர் வே. புருஷோத்தமன்,
வணிக மேலாண்மை மற்றும் கூட்டாண்மை வல்லுநர்,
புதுவாழ்வு திட்டம், சென்னை.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034 (58,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், 24.11.2016 அன்று, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வில், மகளிர் திட்டம், ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி. சுகந்தி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலரும், தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநருமான திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர்கள், புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை 21.12.2016 அன்று, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலரும், புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநருமான திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள், புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர்கள், புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

DPH

NATIONAL HEALTH MISSION

கைகழுவும் முறை

கைகளைக் கழுவுவோம் !
தொற்று நோய்களைத் தடுப்போம் !

கை கழுவும் நேரம் 15–20 வினாடிகள்
செயல்படுத்தத் தேவைப்படும் நேரம் 40–60 வினாடிகள்

1



கைகளைத் தண்ணீரில் நன்றாக நனைக்கவும்.

2



கைமுழுவதும் மணிக்கட்டு வரை தாராளமாக சோப்பு போடவும்.

3



உள்ளங்கைகளை ஒன்றோடொன்று நன்றாக தேய்க்கவும்.

4



இடது கை விரல்களை, வலது கை விரல்களின் இடுக்குகளில் நுழைத்து நன்றாக தேய்க்கவும். இதே போன்று, வலது கை விரல்களை இடது கை விரல்களின் இடுக்குகளில் நுழைத்து நன்றாகத் தேய்க்கவும்.

5



உள்ளங்கை பக்கமாக இருகை விரல்களையும் கோர்த்து நன்றாக தேய்க்கவும்.

6

வலது விரல்களின் பின்புறங்களை, இடது விரல்களால் படத்தில் உள்ளவாறு அழுத்தி தேய்க்கவும். அதேபோல, இடது விரல்களின் பின் புறங்களை வலது விரல்களால் அழுத்தி தேய்க்கவும்.

7

இடது கட்டைவிரலை, படத்தில் உள்ளவாறு வலது உள்ளங்கையில் வைத்து சுழற்றி நன்றாக தேய்க்கவும். அதேபோல், வலது கட்டைவிரலை இடது உள்ளங்கையில் வைத்து நன்றாக தேய்க்கவும்.

8



படத்தில் உள்ளவாறு வலது கைவிரல்களைக் குவித்து இடது உள்ளங்கையில் வைத்து சுழற்றி தேய்க்கவும். அதேபோல், இடது கைவிரல்களைக் குவித்து, வலது உள்ளங்கையில் வைத்து சுழற்றி தேய்க்கவும்.

9



தண்ணீரில் இருகைகளையும் மணிக்கட்டு வரை சோப்பு நுரை போகும் அளவுக்கு நன்றாக தேய்த்துக் கழுவவும்.

10

நல்ல சுத்தமான துணியால், இருகைகளையும் துடைக்கவும்.

11



துண்டை கொண்டு குழாயை மூடவும்.

12



உங்களுடைய கைகள் தற்போது பாதுகாப்பாக உள்ளன.

அவசர உதவிக்கு
24 மணி நேர கட்டுப்பாட்டு மையம்
044-24350496 / 044-24334811
9444340496 / 9361482899

கூடுதல் தகவல்களுக்கு

104
மருத்துவ உதவி
தகவல் • ஆலோசனை • புகார்